# சாதா மனிதனின் சாதனை

*லில்லியன் ஸ்டான்லி*



கோர சூழ்நிலைகளைத் தாண்டி சாதனை புரிந்த ஒரு சாதா மனிதனின் சரித்திரம்தான் இது. பிலிப்புவை இரண்டு தாலந்து மனிதனாகக் கணிக்கிறேன். கர்த்தருக்கு மிகவும் பயந்து நூறு தீர்க்கரை குகைகளில் வைத்துப் பராமரித்து, யேசபேலிடமிருந்து பாதுகாத்த ஒற்றைத் தாலந்து ஒபதியா அல்ல அவர் (1 இரா 18:3,4). பவுலைப் போல ஐந்து தாலந்துடையவரும் அல்ல. அவரது வாழ்க்கையை ஐந்து கட்டங்களாகப் பிரித்திருக்கிறேன்.

### 1. மறைவிலிருந்த பிலிப்பு (அப் 6:1)

கிறிஸ்து உயிர்த்தெழுந்து ஆவியானவர் ஊற்றப்பட்டபோது, சுனாமி போன்றதோர் எழுப்புதல் தொடர்ந்தது. ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டு, எண்ணிக்கை ஐயாயிரத்தைக் கடந்தது. பிலிப்புவும் அதிலொருவர். உதவிக் காரராக நியமிக்கப்படுமுன் அவரைப்பற்றி நாம் கேள்விப்படவில்லை.

அந்நாட்களில் எபிரெய மொழி பேசும் யூதருக்கும், கிரேக்க மொழி பேசும் யூதருக்கும் இடையே சர்ச்சை உண்டானது. இதை சரிசெய்ய எழுவர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் பரிசுத்த ஆவியாலும், ஞானத்தாலும் நிறைந்து நற்சாட்சி பெற்றவர்களாய் இருக்கவேண்டும். தெரிந்தெடுக்கும் பொறுப்பு சபையாரதே. கடல் போன்ற விசுவாசிகள் கூட்டத்தில் மக்கள் பிலிப்புவைத் தெரிந்தெடுத்தனர். பூக்கடை வாசத்திற்கு விலாசம் வேண்டுமா?

அவர் மேல் எந்தக் கறும்புள்ளியும் இல்லை. நல்லவர், நேர்மையானவர், நம்பக்கூடியவர் என்று மக்கள் அறிந்திருந்தனர். கர்த்தருக்காக அவர் கொண்டிருந்த வைராக்கியத்திலும், சிக்கல் களைத் தீர்க்கும் விதத்திலும், ஆலோசனை அருளுவதிலும், அமைதியாய் மக்களைக் கிறிஸ்துவிடம் நடத்துவதிலும் அவரது ஆவியின் நிறைவையும் ஞானத்தையும் காணமுடிந்தது. அவருக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்கப்பட வில்லை, பட்டமும் சூட்டப்படவில்லை. எதையும் எதிர்பாராமல் கர்த்தருடைய காரியங்களில் தீவிர மாயிருந்தார். எந்தவொரு பரிசும் புகழும் எதிர் பாராமல், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே,' என உழைத்தார். எழுவர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நிலையில் மக்களுக்கு இந்த தேக்கு மரம் போன்ற வாலிபன்தான் நினைவிற்கு வந்தது. விதவைகளை விசாரிக்க அவரை சிபாரிசு செய்தனர்.

நமது சுயரூபம் தலைமைத்துவத்தில் தெரியாது, முகம் தெரியாதவராய் இருக்கும் போதுதான் தெரியும். நமது மூலையில் கறைபடாத வர்களாக நற்சான்று பெற்றவர்களாக இருக் கிறோமா? அறையில் ஆடாதவன் அம்பலத்தில் ஆடமுடியாது. பொறுப்போ பட்டமோ கொடுக்கப் படாவிட்டாலும் நமக்கிருக்கும் தாலந்துகளைப் பயன்படுத்தி ஆண்டவருக்காய் வைராக்கியமாய் தீவிரமாய் செயல்பட்டுக் கொண்டிருப்போம். கூட்டத்தில் ஒருவனாக, அறியப்படாதவனாக இருக்கிறேனே, அதுதான் என் சுயரூபம்.

## 2. உதவிக்காரர் பிலிப்பு (அப் 6:5)

இன்னும் ஆறு பேரோடு சேர்ந்து விதவைகளை விசாரிக்க பிலிப்பு தெரிந்தெடுக்கப்பட்டார். பந்தி விசாரணைதான், வேறொன்றுமில்லை (அப் 6:1-3). எழுவரும் அப்போஸ்தலரிடத்தில் அழைத்து வரப்பட்டனர். அவர்கள் ஜெபித்து, கைகளை வைத்து அப்பணிக்கு அவர்களை அர்ப்பணித்தனர். பிலிப்புவுக்கு இது ஒரு முன்னேற்றம்.

பிலிப்புவின் தலை உயர்ந்தது. பீட்டர் ஐயாவோடு கைகுலுக்கத் தருணம் கிட்டுமா? யோவான் ஐயாவோடு பேச முடியுமா? பிலிப்பு ஏங்கியிருப்பார். இப்போது அவர்கள் முன்னின்று நெருக்கமாக அவர்களைப் பார்க்கிறார். பெரும்புள்ளிகளால் அறியப்பட்டவரானார். மறைவிலிருந்து பார்வைக்கு வருவது பயமூட்டலாம். இருளில் இருக்கும்போது மக்கள் உங்களைக் கூர்ந்து நோக்குவதில்லை. இப்போது எல்லாக் கண்களும் இவர் மேல். தன் பணியை நன்றாகச் செய்தார் என்று சொல்லவேத் தேவையில்லை, ஏனெனில் அடுத்த வசனமே, "தேவ வசனம் விருத்தியடைந்து சீடர் தொகை பெருகியது" என்கிறது (அப் 6:7). பிலிப்பு தன் பணியைச் சீராய்ச் செய்ததினால் அப்போஸ்தலர் விடுதலையோடு ஜெபிக்கவும் வசன ஊழியம் செய்யவும் முடிந்தது (6:4). இடைவிடாமல் ஜெபிப்பதோ வசனத்தைப் போதிப்பதோ பிலிப்புவின் வரமல்ல. ஆனால் அப்போஸ்தலருக்கு உதவி செய்ததால் இப்போது அவர்கள் அவற்றை செவ்வனே செய்யமுடிந்தது.

இறைப்பணியில் நமக்கொரு சிறு பொறுப்பு கொடுக்கப்படலாம். தலைமைப் பதவியில் இல்லாவிட்டாலும் கடைநிலை ஊழியராக இருக்கலாம். அதை நாம் உத்தமமாய் செய்யும்போது இறையரசு விரிவடையச் செய்கிறோம். இன்று பிரபலங்கள் பல, வேலைக்காரரோ சிலரே. நீங்கள் வேலைக்காரரானால் வேலையை செம்மையாய்ச் செய்யுங்கள்.

## 3. சுவிசேஷகர் பிலிப்பு (அப் 8:5)

நற்செய்தி அறிவித்தலே பிலிப்புவின் இதயத் துடிப்பு. துன்புறுத்தல், அவரைப் பாதுகாவல் தேடி பதுங்கிக்கொள்ள விரட்டாமல் நெஞ்சுறுதியை அளித்தது. ஸ்தேவானின் கொடூரக் கொலையைப் பார்த்திருந்தும் தனது உடன் ஊழியனின் அடிச்சுவடுகளில் நடக்கத் தீர்மானித்தார். துணிந்தவனுக்குத் தூக்குமேடை பஞ்சு மெத்தைதானே! சிலர் யூதேயாவிற்கும் சிலர் சமாரியாவிற்கும் சிதறின போது, பிலிப்பு சமாரியாவைத் தெரிந்து கொண்டார். சில வருடங்களுக்கு முன்புதான் இயேசு அங்கே விதைவிதைத்து எழுப்புதலைத் துவங்கி வைத்ததினாலோ என்னவோ, "சமாரியாவிலும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று இயேசு மொழிந்ததை நினைவு கூர்ந்திருக்கலாம் (அப் 1:8). மனைவி, நான்கு சிறு பெண்பிள்ளைகள் மற்றும் சுமக்கக்கூடிய பொருட்களோடு 158 கி.மீ. பயணத்தை மேற்கொண்டார். உள்ளமோ உறுதியாயிருந்தது. பெரிய பட்டணமாகிய சமாரியாவில் எங்கே தங்கினார், குடும்பத்தைப் பராமரிக்க என்ன வேலை கிடைத்தது, யாமறியோம். ஆனால் நரைதெளித்திருந்தாலும் தன் நற்செய்திப் பணியைத் துவங்கிவிட்டார். சிக்கனமாக வாழ்ந்து சமாளித்திருக்கலாம். சமாரியர்கள் கிறிஸ்துவை அறியத் துவங்கினர் (8:6). அற்புதங்கள் அரங்கேறின. நமது மந்திரவாதியைக் காட்டிலும் பெரியவர் என்றச் செய்தி பரவியது. மக்கள் சுகம் பெற்றனர். சீமோனின் மேஜிக் ஷோவை மிஞ்சின சந்தோஷம் பட்டணத்தை ஆட்கொண்டது (வச 5-13). சபைகள் நிறுவப்பட்டன (9:31). விதைக்கப்பட்ட விதை குவியல் குவியலாய் பலன் தந்தது.

புதிய கிறிஸ்தவரை பிலிப்புவினால் அபிஷேகத் திற்குள் நடத்தமுடியவில்லை. துவண்டுவிட்டாரா? பேதுருவுக்கும் யோவானுக்கும் வாசலை விரிவாய்த் திறந்துவிட்டார். மக்கள் அவர்களைப் பற்றிக்கொள்வார்களே என்று பயப்படவில்லை.

''திருமறையில் தனிமை மதத்திற்கு இடமில்லை'' என்றார் ஜான் வெஸ்லி. யார் குத்தினாலென்ன, நெல் அரிசியானால் சரி என்பதே பிலிப்புவின் தத்துவம். ''யாருக்குப் புகழ் போகிறது என்று கவலைப்படாவிட்டால் நீங்கள் அசாதாரண சாதனைகளைப் புரியலாம்'' என்றார் 33ஆவது அமெரிக்கப் பிரதமரான ஹாரி S. ட்ரூமன்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்; பலவீனமோ, நோய்நொடியோ, கால்களை இழுத்துக்கொண்டே போய் கிறிஸ்துவைப் பிரசங்கியுங்கள். சோர்வுக்கு இடங்கொடாதீர்கள். துன்புறுத்தலுக்குப் பயப்படாதீர்கள். ஞானமாய் மட்டும் நடந்து கொள்ளுங்கள். என்ன வேலையிலிருந்தாலும் நாம் ஒவ்வொருவரும் ஆத்துமாதாயகராயிருக்க வேண்டும். கனிகொடாத வாழ்க்கையின் பயனென்ன? கிறிஸ்தவ வாழ்வின் நோக்கமே ஊழியம்தான். கடவுள் தடைசெய்யாததினால் மிஷனரி ஆன கிறிஸ்தவர்தான் பிலிப்பு.

## 4. தனித்தாள் ஆத்தும ஆதாயகர் பிலிப்பு (அப் 8:26)

நற்செய்திப் பணியின் நெருக்கடிகளினூடே ஒரு தேவதூதனின் சத்தம், ''நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய்ப் போ''(அப் 8:26). என்ன? சபையாரை விட்டுவிட்டுப் போவதா? தலைமைப் பதவியிலிருந்து இறங்கி வருவதா? பெயரையும் புகழையும் உதறிவிட்டுக் கிளம்புவதா! பால் பொங்கி வரும்போது பானையைப் போட்டு உடைக்கவா? இரண்டாம் வரிசைத் தலைவர்கள் எழும்பினவுடன் பிலிப்பு கையில் டீயுடன் உட்கார்ந்துவிட்டாரோ? ''எழு'' என்ற தூதனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து துடித்தெழுந்தார். தன் நிலையை விட்டிறங்கி நடை போட்டார். ''எதற்கு?'' என்றுகூடக் கேட்கவில்லை. ''காலையில் போகிறேன்'' என்றிருந்திருப்பாரானால் இரதத்தை விட்டிருப்பார். உடனடி கீழ்ப்படிதல் காரியத்தை முடித்தது.

கடுமையான வனாந்தரப் பயணம். இருப்பினும் அவருக்கு ஒரு ஆத்துமா உலகத்தினும் விலையேறப் பெற்றது (மாற் 8:36). 99 ஆடுகளை விட்டுவிட்டு ஒரு ஆட்டைத் தேடிப் போனார். அதனால் நற்செய்தி தேசம் விட்டு தேசம் பறந்தது. நடுவயதிலும் இளைஞனைப் போல ''ஓடிப்போய்'' இரதத்தைப் பிடித்தார்.

கடவுளுக்காய் கடலைக்கடக்கும் காளைகள் இன்று எங்கே? கடந்த நாட்களில் வாலிப ஆண்களும் பெண்களும் குழுக்களாக நற்செய்தியைச் சுமந்து சென்று கிராமங்களைப் பற்ற வைத்தனரே. சேரிகளின் வாடையைத் தவிர்த்து மேடையைத் தேடி ஓடுவோர் பெருகிவிட்டனரே. தோற்கப் பிறந்தவர்கள் யாரும் கிடையாது. எனவே துயிலெழுந்து துடிப்புடன் புறப்படுவீர். ஆண்டவரின் சத்தத்தை அல்லத் தட்டாதீர். ஒரு ஆத்துமாவையும் அசட்டை செய்யாதீர். தேவனைக் கண்டு கொள்ளத் தடவித் திரிவோரைத் தேடிச் செல்வீர். ''சிறிய கீலில்தான் பெரிய கதவு இயங்குகிறது. ஆவியானவரின் மெல்லிய வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிவோமானால் மகத்தான காரியங்கள் நடக்கும்.'' என்கிறார் பெங்களூரு, ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஆயர் ஆஷிஷ் ரெய்சூர். ''தனது திட்டங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்த இயற்கைக்கப்பாற்பட்ட விதங்களில் தேவன் பேசினாலும் பொதுவாக பரலோக தரிசனங்கள் இதயத்தின் மென்மையான கிளர்ச்சியினாலேயே அறியப்படும். உங்கள் இதயத்தில் அசைவாடுவது என்ன என்று கவனியுங்கள்'' என்கிறார் அவர்.

பிலிப்புவிடமிருந்து இன்னொரு பாடத்தைக் கற்கிறோம் — பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல். சமாரிய எழுப்புதலை தானே சமாளிக்க அவர் முயலவில்லை. உள்ளூர் தலைவர்களைப் பயிற்றுவித்து ஊழியத்தை அன்னார் கரங்களில்

ஒப்படைத்ததினால் சோர்வுக்குத் தப்பினார். தேவனது அழைப்பு வந்தபோது கூண்டோடு இடம் பெயர முடிந்தது.

## 5. குடும்பத் தலைவர் பிலிப்பு (அப் 21:8)

எத்தியோப்பிய மந்திரியை சந்தித்தப் பிறகு ஆவியானவர் பிலிப்புவைக் கொண்டுபோய் ஆசோத்திலே விட்டுவிட்டார். அங்கிருந்து வழியிலிருந்தப் பட்டணங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்துக்கொண்டே அவர் 120கி.மீ. கடந்து செசரியா வந்து சேர்ந்தார் (அப் 8:40). அங்கே குடியேறினார். கொர்நேலியு வாழ்ந்ததும், பேலிக்ஸ், பெஸ்து, அகரிப்பா அரசர் மற்றும் பெர்னீக்கேயாளுக்கு முன்பாகப் பவுல் விசாரணைக்கு நின்றதும் இப்பட்டணத்தில்தான்.

ஊழியம், ஊழியம் என்று தலைதெறிக்க ஓடி, பிலிப்பு குடும்பத்தை கவனிக்காமல் விடவில்லை. ஊழியத்தை நேசித்த அளவு குடும்பத்தை நேசித்தார். நான்கு பெண் பிள்ளைகளும் கன்னியர், தீர்க்கதரிசினிகள் என்பது அவர்கள் இறைபக்திக்கேதுவான கிறிஸ்துவ கண்காணிப்பில் வளர்க்கப்பட்டதைக் காட்டுகிறது. பவுலும் குழுவினரும் "அனேகநாள்" அங்கே தங்கியிருந்தனர் (அப் 21:10). இப்போது பிலிப்பு பெருந்தலைகளுக்கு நெருக்கமாயிருக்கிறார். குழுவில் ஒருவர், "செசரியாவா? வாடகை கூரையைப் பிய்த்துக் கொண்டு போகுமே?" என்றிருப்பார். "அட, நம்ம பிலிப்பு அங்கிருக்காருல்ல" என்றிருப்பார் இன்னொருவர். ஆக அங்கே டேரா அடித்தனர். அகபு அங்கு வந்து தீர்க்கதரிசனம் உரைத்தார். அவர்கள் வீடு சுவிசேஷத் தேன்கூடாய் செயல்பட்டது. வெள்ளைத்தலை பிலிப்பு குடும்பத்தினருக்கு தனியுரிமை (privacy) பறிபோனது குறித்து அக்கறையில்லை. உற்சாகமாக விருந்தினரை உபசரித்தனர். கேஸ் ஸ்டவ்வா, கிரைன்டரா, மிக்சியா, டிஷ்வாஷரா, வாஷிங் மெஷினா, ஃப்ரிட்ஜா, குக்கரா? கற்பனை செய்து பாருங்கள். பிலிப்புவைப் போன்ற விசுவாசிகள் இருந்தால், எதிர்காலம் பொற்காலம்தான்.

பிள்ளைகளோடு நேரம் செலவழிப்பதை வீண் என்று நினைக்காதீர்கள். வேலைகளை மறந்து விட்டு அவர்களோடு விளையாடுங்கள். திருமறையை வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொடுத்து கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்த்திடுங்கள். கடவுள் நமக்குச் சொந்த அல்லது வாடகை வீடு கொடுத்திருப்பாரானால் அது அவர் பணிக்கே சமர்ப்பணம். இறையரசு விரிவடைய வாசல்களைத் திறந்து வைப்போம். சுலபமல்ல தியாகம்தான். நேரமும் உடல்நிலையும் இடம் கொடுக்குமளவு வீடும் சொத்தும் இறைப்பணிக்கே என்போம். முறுமுறுக்காமல் உபசரிப்போம்.

இதையெல்லாம்விட, குடும்பத்தின் தேவைகளுக்குக் குருடராகிவிடாதிருப்போம். பிசாசின் தந்திரங்கள் நமக்குத் தெரியாதவை அல்லவே. விழிப்பாயிருங்கள். ஊழியத்திற்கு முன்பாக, குடும்பத்தை இறையரசின் செட்டைகளின் கீழ் பாதுகாப்பது அதிமுக்கியம்.

உங்களையும் என்னையும் போன்ற இரண்டு தாலந்து மக்களுக்கு பிலிப்பு ஒரு முன்மாதிரி. அவரது சரித்திரம் ஓர் எழுப்புதலின் சரித்திரம். அவரைப்போல வாழ்வின் ஐந்து நிலைகளிலும் முன்மாதிரிகளாவோம். அவரது உத்தமத்தை மறைவில் கண்ட தேவன் அவரை உதவிக்காரர் ஆக்கினார். அங்கு பிரகாசித்த அவர் கையில் பெரிய சமாரிய ஊழியத்தைக் கொடுத்தார். பின்பு ஒரு தேசத்திற்கே நற்செய்தி அனுப்பப் பயன்படுத்தினார். பின்பு ஒரு பட்டணத்தில் வைத்து சுற்றும் முற்றும் நற்செய்தி பரவச் செய்தார். அவரது உத்தமம் அவரை கவண் கல்லாகத் தூக்கியடித்து உலகப் பிரசித்திபெற்ற திருமறையில் இடம்பெறச் செய்தது. அவரது முன் மாதிரியைப் பின்பற்றுவோம்!